Staring of a new University.

* 290 *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether there are proposals under the consideration of the Government to start a new University in the State ?

புதிய பல்கலைக் கழகம் ஒன்றைத் தொடங்குதல்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்

இம் மாநிலத்தில், புதிய பல்கலைக் கழகம் ஒன்றைத் தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

Whips Conference.

* 291 *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the expenditure incurred by the Government in connection with the attendance of the Whips of both the Houses of Legislature at the Whips Conference held at Bhopal in November, 1972 ?

கட்சிக் கொறடாக்கள் மாநாடு.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1972 நவம்பரில், போபாலில் நடைபெற்ற கட்சிக் கொறடாக்கள் மாநாட்டில், சட்ட மன்றத்தின் இரு அவைகளின் கொறடாக்களும் கலந்து கொண்டதால் மாநில அரசுக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இம் மாநாட்டில் சட்ட மன்றப் பேரவை ஆளுங்கட்சித் தலைமைப் பாகர் (Whip) மட்டும் கலந்துகொள்ள அனுமதியளிக்கப்பட்டார். இதற்கான செலவு ரூபாய் 664·90 ஆகும்.